**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 42 /2020**

**பி.வா.சா. 2– கலைவாணி**

**<u>01–09–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc,. MA படித்துள்ளேன். இந்த வழக்கு பிரச்சனை குறித்த விபரம் எனக்கு எப்போபது தெரியவந்தது என்றால் வழக்கின் அறிவிப்பு வந்தபிறகு 2020 ஆம் ஆண்டில் தெரியும். அதற்கு முன்பு வழக்கு பிரச்சனை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா மீதும், மற்றவர்கள் மீதும் எஸ்பி மணி வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். அது என்ன வழக்கு என்றால் குறித்த நேரத்தில் பத்திரத்தை பதிவு செய்யாததால் எஸ்பி மணி வழக்கு தாக்கல் செய்திருந்தார். அதன் பிறகு அவ்வழக்கில் சமரசம் ஏற்பட்டுவிட்டது.

2. எஸ்பி மணி சொத்து குறித்து எனது அப்பாவிடம் ஒப்பந்தம் செய்து ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அவ்வழக்கில் எனது அப்பா நீதிமன்றத்தல் ஆஜராகி எஸ்பி மணியிடம் ஒப்பந்தம் போடவில்லை என்றும் கடனுக்காக எழுதிக்கொடுத்ததாக எதிர் வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. அதைப்பற்றி எனக்கு விபரம் தெரியாது. எனது அப்பா கடன் வாங்கியிருந்ததாகவும் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது அப்பாவும் சந்திரசேகரும் நண்பர்கள்.

3. எனது அப்பாவும் சந்திரசேகரும் வா.சா.ஆ.4 மூலம் சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவும் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான். அதில் 2 வது

அயிட்ட சொத்து அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விபரம் பி.வா.சா.ஆ.2 ல் உள்ளதா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. சொத்திற்கு பவர் கொடுத்த வேலப்பன், எனது அப்பா மற்றும் நான் வேலம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அடுத்தடுத்த வீதியில் உள்ளோம்.

4. வேலப்பன் எப்பொழுது இறந்தார் என்ற விபரம் எனக்கும் எனது அப்பாவிற்கும் நன்கு தெரியும் என்றால் அப்பாவிற்கு தெரியும் எனக்கு தெரியாது. தற்போது வேலப்பன் இறந்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் 9 அல்லது 10 ஆம் வகுப்பு படித்தபோது வேலப்பன் இறந்துவிட்டதாக எனது அம்மா சொன்னார். 5 வது பிரதிவாதி விஜயசேகரன் எனது குடும்ப நண்பர் என்றால் சரிதான். வேலப்பன் எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. பி.வா.சா.ஆ.2 கோபியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் சொத்தை எழுதிக் கொடுத்துள்ள எனது அப்பாவும், சந்திரசேகரும் திருப்பூரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எழுதி வாங்கியவரும் திருப்பூரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அதேப்போல் சந்திரசேகரும், எனது அப்பாவும் அவரவர் மனைவிக்குதான் சொத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சொத்தை எழுதி வாங்கியவரும், எழுதி கொடுத்தவரும் திருப்பூரில் உள்ள நிலையில் எதனால் கோபிசெட்டிபாளையத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் பி.வா.சா.ஆ.2 ல் உள்ளதா என்றால் இல்லை.

6. கோபிசெட்டிபாளைம், அலுக்குலி கிராமத்தில் எனது அப்பாவிற்கு பூர்வீக சொத்து இருந்ததா என்றால் சொத்து இருந்திருக்கலாம் ஆனால் பூர்வீகத்தில் இல்லை. பி.வா.சா.ஆ.2 ல் அலுக்குலி கிராமத்தில் எனது

அப்பாவிற்கு சொத்து இருந்ததாக குறிப்பிட்டு எழுதி எனது அம்மாவிற்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது அந்த சொத்து என்ன நிலையில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உண்மையில் எனது அப்பாவிற்கு அலுக்குலி கிராமத்தில் சொத்து இருந்திருந்தால் அவரது இறப்பிற்கு பிறகு நாங்கள் அந்த சொத்தை பாகப்பிரிவினை செய்திருப்போம் என்றும், எனது அப்பாவிற்கு அலுக்குலி கிராமத்தில் சொத்தே இல்லையென்றால் சொத்து இருந்தது ஆனால் என்ன ஆனது என்ற விபரம் தெரியாது.

7. பி.வா.சா.ஆ.2 ல் அலுக்குலி கிராமத்தில் உள்ள க.ச.எண்.114 ல் உள்ள சொத்து அரிஜின காலனியாக இன்றும் உள்ளது என்றும், எங்களுக்கும் அந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றால் தெரியாது. உண்மையில் வேலப்பன் இறந்துவிட்ட பிறகு அதனை மறைக்க வேண்டி அவர் கொடுத்த பொது அதிகாரத்தை வைத்து வேறு மாவட்டமான கோபிசெட்டிபாளையத்தில் பத்திரத்தை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் அனைத்தும் போலியானது என்றும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

8. அதன் பிறகு நாங்களும் எனது குடும்ப நண்பர்களும் சேர்ந்து 2001 ஆம் ஆண்டிற்கு பிறகு அந்த சொத்து குறித்து பல வருடங்கள் கழித்து பல ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளோம் அதுவும் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தென்னரசு எங்களுக்கு பல ஆண்டுகளாக குடும்ப நண்பர் என்றால் சரிதான். 2000 ஆம் ஆண்டிற்கு பிறகு எங்களுக்கு அவர் அறிமுகம். எனது அம்மா நல்ல நிலையில் உள்ளார். எனது தான செட்டில்மெண்ட் எழுதிய சொத்திற்கு வடபுறம் யார் உள்ளார் என்றால் தெரியாது. தென்புறம் யார் உள்ளார் என்றால் ரோடு உள்ளது. அந்த இடம் கிழக்கு பார்த்த சொத்து. அது சுமார்

30 அது செண்ட் இருக்கும். நான் செட்டில்மெண்ட் வாங்கியபோது வேலப்பனின் பெயர் பட்டாவில் இருந்தது என்றால் சரியல்ல.

9. பாக சாசனம் ஏற்படுத்தியபோதும் வேலப்பனின் பெயர் பட்டாவில் இருந்தது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் பொது அதிகாரப் பத்திரம் எழுதிக்கொடுத்தபோதே வேலப்பனுக்கு பணம் கொடுத்துவிட்டதாக சொல்லியதற்கு ஆவணம் உள்ளதா என்றால் பொது அதிகாரப் பத்திரம் தான் ஆவணம். அந்த பொது அதிகாரப் பத்திரத்தில் பணம் கொடுத்த விபரம் உள்ளதா என்றால் இல்லை. உண்மையில் வேலப்பனுக்கும் அவரது வாரிசுகளுக்கும் எனது அப்பாவும், சந்திரசேகரும் பணம் கொடுக்கவில்லையென்றும், அவ்வாறு கொடுத்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

10. வேலப்பன் இறந்த விபரம் எங்களுக்கு நன்கு தெரிந்த பிறகு ஏற்படுத்திய ஆவணங்கள் செல்லாது என்றும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.09.01 06:17:46 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.